## காந்தியடிகளின் மத நல்லிணக்கம் – தந்தை பெரியாரின் சமூக நீதிப் பார்வை இந்தியாவிற்கு தேவை!

# வரும் தேர்தல் தமிழ்நாடு vs NDA - இதில் தமிழ்நாடு வெல்லும்!

## மதுரையில் மக்கள் நீதி மய்யம் நடத்திய ‘மறவோம்’ என்ற தலைப்பில் நடைபெற்ற காந்தி விழாவில் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

மதுரை, பிப்.23-

**மனிதத்தையும், மனிதர்களையும் அழித்து ஆட்சியைப் பிடிக்க நினைக்கின்ற பா.ஜ.க.வின் பிடியில் தமிழ்நாடு சிக்கக் கூடாது. இந்த தேர்தல், தமிழ்நாடு vs NDA, அதில் தமிழ்நாடு வெல்லும் என்றும், காந்தியடிகளின் மத நல்லிணக்கமும், தந்தை பெரியாரின் பகுத்தறிவு, சமூகநீதி பார்வையும்தான் தமிழ்நாட்டிற்கு தேவை, இந்தியாவிற்கும் தேவை எனவும், மக்கள் நீதி மய்யம் சார்பில் ‘மறவோம்’ என்ற தலைப்பில் நடைபெற்ற காந்தி விழாவில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டார்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.2.2026) மதுரை, காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் நடைபெற்ற ”மறவோம் Remembering Bapuji & Brothers என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கமல்ஹாசன், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் பெ. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் மு. வீரபாண்டியன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் நித்தியானந்தன், தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் தி. வேல்முருகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. வெங்கடேசன், மு. பூமிநாதன், மக்கள் நீதி மய்யத்தின் பொதுச் செயலாளர் அருணாசலம், துணைத் தலைவர்கள் மௌரியா மற்றும் தங்கவேலு, மக்கள் நீதி மய்யத்தின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தோழமைக் கட்சிகளின் நிருவாகிகள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், மதுரையில், மக்கள் நீதி மய்யத் தலைவர் கமல்ஹாசன் அவர்களின் எண்ணத்தில், கமல் பண்பாட்டு மையம் ஒருங்கிணைத்த ‘மறவோம்’ எனும் காந்தியடிகளைப் போற்றும் நிகழ்வில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

மக்கள் நீதி மய்யம் தலைவரும், கலைஞானியுமான என்னுடைய அருமைச் சகோதரர் கமல்ஹாசன் அவர்கள், ‘மறவோம்’ என அவருக்கே உரிய பாணியில், தனித்துவமாக, சிறப்பாக நடத்தும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று காலையில் இருந்து, ஐந்து, ஆறு அரசு நிகழ்ச்சிகள், மாலையில் ஒரு மிகப் பெரிய தேர்தல் களத்தில் பணியாற்றும் பாக முகவர்களின் மாநாடு, அதைத் தொடர்ந்து இந்த நிகழ்வு!

### கமலின் அழைப்பை ஏற்று சகோதர பாசத்துடன் வந்துள்ளேன்!

நம்முடைய சகோதரர் கமலஹாசன் அவர்களின் அழைப்பை நான் மறுக்க முடியுமா? நான் எண்ணிப் பார்க்கிறேன்… முரசொலியின் பவள விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அவர் ஆற்றிய உரையும் இதுவரையில் என்னால் மறக்க முடியாது. அந்த நட்புணர்வோடுதான், சகோதர பாசத்தோடுதான், இந்த நிகழ்ச்சிக்கு நான் வந்திருக்கிறேன்.

கமல் அவர்கள், திரைப்படத்தில் ஒரு டயலாக் பேசியிருப்பார். “மறதி – ஒரு தேசிய வியாதி” என்று, அதுபோன்று, காந்தியடிகளையும் மக்கள் மறந்துவிடக் கூடாது என்றுதான், காந்தியின் வாழ்க்கையில், பெரிய திருப்புமுனையை மன மாற்றத்தை ஏற்படுத்திய மதுரை மண்ணில், ‘மறவோம்’ என்கிற நிகழ்ச்சியை அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். காந்தி என்றதும் நம் மனதில் என்ன தோன்றும்? அவர் அரையாடை அணிந்து மேலே ஒரு துண்டோடு இருக்கும் எளிமையான உருவம்தான் அனைவர் மனதிலும் தோன்றும். அவ்வாறு அவர் அரையாடைக்கு மாறிய மண்தான், இந்த மதுரை மண்! அப்படிப்பட்ட மதுரையில், அதுவும் காந்தி அருங்காட்சியகத்தில், இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது.

### இந்தியாவில் காந்திக்காக மதுரையில் அமைக்கப்பட்ட முதல் அருங்காட்சியகம்!

இராணி மங்கம்மாள் அவர்களால் கட்டப்பட்ட அரண்மனையில், இந்த அருங்காட்சியகத்தை அமைத்து, இந்தியாவின் முதல் பிரதமரான நேரு அவர்கள்தான் இதை திறந்து வைத்திருக்கிறார். இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்து இந்த அருங்காட்சியகத்தை புதுப்பிக்கும் பணிகள் 10 கோடி ரூபாய் செலவில் நடந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்திய நாட்டில், காந்திக்காக அமைக்கப்பட்ட முதல் அருங்காட்சியகம் இதுதான். அண்ணல் சுடப்பட்டபோது அணிந்திருந்த, ரத்தக் கறை படிந்த வேட்டி இங்கேதான் இருக்கிறது. அவர் பயன்படுத்திய பொருட்கள் எல்லாம் இங்கே இருக்கிறது. காந்தியடிகளை ‘தமிழர்கள் மறவோம்’ என்பதன் அடையாளம்தான் இந்த அருங்காட்சியகம்.

இந்த நேரத்தில், தந்தை பெரியார் அவர்களை நினைத்து பார்க்கிறேன். அண்ணல் காந்தியின் அடியொற்றி அரசியல் களத்துக்கு வந்தவர் தந்தை பெரியார் அவர்கள்! பின்னாளில், காந்தியடிகளின் பல விஷயங்களில் முரண்படவும் செய்தார். ஆனால், அண்ணல் காந்தியடிகள் ஒரு பயங்கரவாதியால் அநியாயமாக சுட்டுக் கொல்லப்பட்டபோது, தந்தை பெரியார்தான், “இந்திய நாட்டுக்கு காந்தி தேசம் என்று பெயர் சூட்ட வேண்டும்” என்று உணர்ச்சி பொங்க பேசினார்!

காந்தியடிகள், தந்தை பெரியார், இந்த இரு ஆளுமைகளையும் அனைத்து மேடைகளிலும், நம்முடைய அருமைச் சகோதரர் கமல்ஹாசன் அவர்கள் நினைவு கூராமல் இருக்கவே மாட்டார். தன்னுடைய தந்தை, காந்தியைத் தொட்டு, அவரிடம் காலணா நிதி அளித்ததாக பெருமையுடன் அவர் சொல்லி இருக்கிறார்.

### காந்தியத்தை நம் நாடு இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும்!

நான் இந்த நிகழ்ச்சியை எவ்வாறு பார்க்கிறேன் என்று சொன்னால், தன்னுடைய ‘ஹே ராம்’ படத்திலும், காந்தியடிகளை கொல்ல வேண்டும் என்று கிளம்புகின்ற ஒரு கதாபாத்திரம் இறுதியில் திருந்துவதை காட்டியிருப்பார். வெறுப்பரசியலை மூர்க்கமாக திணிக்கும் ஒரு கட்சி ஒரு கொள்கை, ஒன்றியத்தில் ஆளும் காலத்தில், காந்தியத்தை நம்முடைய நாடு இறுக பற்றிக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் நிகழ்வுதான், இந்த நிகழ்வு!

> **என்னைப் பொறுத்தவரை, ஒற்றைத்துவத்திற்கு எதிரானவர் காந்தி! இந்து – முஸ்லீம் ஒற்றுமையின் அடையாளம் காந்தி! மதநல்லிணக்கத்துக்கான மகத்தான மந்திரம் காந்தி! இந்தியா அனைவருக்குமான நாடு என்ற கருத்தியல்தான் காந்தி! “நான் கொல்லப்பட்டாலும் கூட ராம், ரகீம் என்கிற பெயர்களை அடிக்கடி உச்சரிப்பதை விடமாட்டேன். இரண்டும் ஒரே கடவுளின் பெயர்கள்” என்று சொன்னவர் காந்தி! இதனால்தான், மதத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் அற்பர்களுக்கு காந்தியை பிடிப்பதில்லை.**

கமல் அவர்கள் அடிக்கடி சொல்வது போன்று, “நாமும் காந்தியை பிறரில் தேடாமல், காந்தியாக மாறுவோம்” இதனை ‘மறவோம்’ என்பதற்காகவே இந்த நிகழ்ச்சி. அனைத்து மாற்றங்களும் தன்னில் இருந்து உருவாக வேண்டும் என்று சொன்னவர் காந்தியடிகள். அதைத்தான் நம்முடைய கமல் அவர்களும் சொல்கிறார். எனக்கு எழுதிய கடிதத்தில் கூட “இன்றைய இந்தியா, உலகம் எதிர்கொள்ளும் முரண்கள், தனி வாழ்வில் ஏற்பட்டிருக்கின்ற சவால்கள் ஆகியவை காந்தியாரின் தேவையை முன்னெப்போதையும் விட அதிகரித்திருக்கிறது” என்று கமல் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்.

### காந்தி என்ற பெயரே இருக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள்!

காந்தியடிகளை மக்களுடைய மனதில் இருந்து எப்படியாவது அகற்றிட வேண்டும் என்று இன்றைய ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டு துடித்துக் கொண்டிருக்கிறது. காந்திய கொள்கைகளை அழிக்க வேண்டும் என்ற நிலையில் இருந்து, இப்போது, காந்தி என்கின்ற பெயரே இருக்கக் கூடாது என்ற இடத்திற்கு அவர்கள் நகர்ந்திருக்கிறார்கள். அதற்கு எடுத்துக்காட்டுதான், நூறு நாள் வேலைத் திட்டத்தில் இருந்து, காந்தியடிகள் பேரை நீக்கியது! அடுத்து, கரன்சி நோட்டில் இருந்தும் காந்தி படத்தை எடுத்தாலும் எடுத்துவிடுவார்கள்.

என்னைப் பொறுத்தவரை, ஒற்றைத்துவத்திற்கு எதிரானவர் காந்தி! இந்து – முஸ்லீம் ஒற்றுமையின் அடையாளம் காந்தி! மதநல்லிணக்கத்துக்கான மகத்தான மந்திரம் காந்தி! இந்தியா அனைவருக்குமான நாடு என்ற கருத்தியல்தான் காந்தி! “நான் கொல்லப்பட்டாலும் கூட ராம், ரகீம் என்கிற பெயர்களை அடிக்கடி உச்சரிப்பதை விடமாட்டேன். இரண்டும் ஒரே கடவுளின் பெயர்கள்” என்று சொன்னவர் காந்தி! இதனால்தான், மதத்தை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தும் அற்பர்களுக்கு காந்தியை பிடிப்பதில்லை.

அண்மையில், பா.ஜ.க.வை சேர்ந்த ஒரு முதலமைச்சரே முஸ்லீம்களுக்கு எதிராக வன்முறையை தூண்டுவதை பார்த்திருப்பீர்கள். இதை சொல்லவே நமக்கு வெட்கமாக இருக்கிறது! ஆனால், எந்த வெட்கமும் இல்லாமல் இப்படியான செயல்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். சமூக ரீதியாக, கல்வி ரீதியாக பிற்படுத்தப்பட்ட முஸ்லீம்களுக்கு இடஒதுக்கீடு கூட இருக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள். கிறிஸ்துமஸ் அன்றைக்கு கிறிஸ்துவர்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். மாற்றுத்திறனாளி என்றுகூட பார்க்காமல், சிறுமி மீது தாக்குதல் நடத்துகிறார்கள். தமிழ்நாட்டிலும், இப்படிப்பட்ட சம்பவங்களை அரங்கேற்ற வேண்டும் என்று வெறி பிடித்து அலைகிறார்கள். நம்முடைய அரசும், உங்களைப் போன்ற தோழமை கட்சிகளும் இருக்கும் வரை, அதை நாங்கள் நடக்க விடவே மாட்டோம்.

### மதவெறி நாட்டில் புகுந்தால் முதலில் இறப்பது மனிதம்தான்!

மன்ட்டோ என்ற புகழ்பெற்ற எழுத்தாளர், இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது நடந்த வன்முறைய பார்த்து, என்ன சொன்னார் தெரியுமா? “முட்டாள்களே, இலட்சம் முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர், இலட்சம் இந்துக்கள் கொல்லப்பட்டனர் என்று எழுதாதீர்கள். 2 இலட்சம் மனிதர்கள் கொல்லப்பட்டனர் என்று எழுதுங்கள்” என்ற மனம் வெதும்பி சொன்னார்! அவர் சொன்னது சரிதான்! மதம் பிடிக்காமல் மக்களை பக்குவப்படுத்துவதுதான் மதங்களின் வேலை! மதவெறி புகுந்தால், முதலில் இறப்பது மனிதம்தான்! இதை நன்றாக உணர்ந்த காரணத்தினால்தால் வெறுப்பை புறந்தள்ளி, தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது!

மனிதத்தையும், மனிதர்களையும் அழித்து ஆட்சியை பிடிக்க நினைக்கின்ற பா.ஜ.க.வின் பிடியில் தமிழ்நாடு சிக்கக் கூடாது! இதற்காகதான் சொல்கிறேன், இந்த தேர்தல், தமிழ்நாடு vs NDA, அதில் தமிழ்நாடு வெல்லும்! பா.ஜ.க. வெறுப்பு எஞ்சின்கள் தமிழ்நாட்டிற்கு தேவையே இல்லை! காந்தியடிகளின் மதநல்லிணக்கமும், தந்தை பெரியாரின் பகுத்தறிவு, சமூகநீதி பார்வையும் தான் தமிழ்நாட்டிற்கு தேவை! இந்தியாவிற்கும் தேவை! அந்த அடிப்படையில்தான், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் சகோதரர் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யமும் இணைந்திருக்கிறது.

சிலர் சொல்லுவார்கள், சகோதரர் கமல் பேசுவது ‘எங்களுக்கு புரியவில்லை’ என்று, அவர்களுக்கு புரியாமல் இல்லை! ஆனால், புரிந்து கொள்ளக் கூடாது என்று நினைக்கிறார்கள். மீடியா, மைக் முன்னால் புலம்பிக் கொண்டிருந்தவர்களை, இப்போது பார்லிமெண்ட் மைக்லேயும் சகோதரர் கமல் புலம்ப வைத்துவிட்டார்! அதற்கு என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துகள்!

### கமலின் சமூகநீதி குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும்!

அதுமட்டுமல்ல, அவர் தொடங்கிய மக்கள் நீதி மய்யம் 9-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த வேளையில், சம நீதிக்காகவும், சமூக நீதிக்காகவும் உங்கள் குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும் என வாழ்த்துகிறேன்! “அன்பின் பாதை சேர்ந்தவருக்கு முடிவே இல்லையடா” என்பது சகோதரர் கமலின் பாடல் வரி! அப்படி அன்பின் பாதையை வலியுறுத்திய காந்தியை மறவோம்! காந்தியின் கொள்கைகளை காக்க, வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்!

---

## வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட

# இ-வாடகை 2.0 ஆன்லைன் கைபேசி செயலி!

## தருமபுரியில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் துவக்கி வைத்தார்!



*தருமபுரி, பிப்.23-*

*வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் விவசாயிகளின் நலனுக்காக உருவாக்கப்பட்ட இவாடகை 2.0 ஆன்லைன் கைபேசி செயலியினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 21.02.2026 அன்று தர்மபுரி மாவட்டத்தில் தருமபுரி விற்பனைக்குழு அலுவலகம், மதிகோண்பாளையத்தில் துவக்கி வைக்கப்பட்டது.*

*அதன் விவரம் வருமாறு:-*

*வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள், 2024-2025ஆம் நிதியாண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கை உரையின் போது தனியார் வேளாண் இயந்திரங்கள் வாடகை கைபேசி செயலி உருவாக்குவதற்கான அறிவிப்பை வெளியிட்டார். வேளாண்மைப் பொறியியல் துறையின் இயந்திரங்களை விவசாயிகள் ஆன்லைனில் முன்பதிவு செய்து வாடகைக்கு பயன்படுத்திடும் வகையில், ஏற்கனவே இவாடகை ஆன்லைன் கைபேசி செயலி பயன்பாட்டில் உள்ளது.*

*இதனை மேம்படுத்தி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மற்றும் தனியாருக்கு சொந்தமான வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் எளிதில் வாடகைக்கு பெற்று பயன்பெறும் வகையில் “இவாடகை 2.0” என்ற மேம்படுத்தப்பட்ட இவாடகை ஆன்லைன் கைபேசி செயலி ரூ.37.88 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.*

*வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் வாடகைக்கு எடுப்பதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்தி, நவீன தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்கான சேவை வழங்கலை மேம்படுத்துதல் மற்றும் வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல் ஆகியவற்றை இச்செயலி முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ளது.*

*இந்த மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தளம், உழவர் செயலியுடன் ஒருங்கிணைக்கப்படுவதால், விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரங்களை தேவையான நேரத்தில் தங்கள் இருப்பிடத்தில் இருந்தே ஆன்லைன் மூலம் முன்பதிவு செய்ய இயலும்.*

*மேலும், இந்த செயலி விவசாயிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வேளாண் இயந்திரங்கள் அல்லது தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களுக்கிடையேயான நேரடி தொடர்பை ஏற்படுத்தி, இடைத்தரகர்களின் தேவையின்றி சேவைகள் வழங்கப்படுவதால், கூடுதல் செலவுகள் குறைக்கப்படுகின்றன. அதே நேரத்தில், சேவை வழங்கலில் வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை உறுதி செய்யப்படுகிறது. குறிப்பாக உழவு, விதைப்பு, அறுவடை போன்ற முக்கிய காலகட்டங்களில் வேளாண் இயந்திரங்களை முன்கூட்டியே முன்பதிவு செய்வதன் மூலம், விவசாயப் பணிகள் தங்கு தடையின்றி நடைபெற உதவுகிறது.*

*இ வாடக- 2.0 செயலியில், வேளாண்மைப் பொறியியல் துறையானது, விவசாயிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க வேளாண் இயந்திரங்கள் அல்லது தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களுக்கிடையே ஒருங்கிணைப்பாளராக செயல்படும். இச்செயலியில் இதுவரை, 892 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களும், 5952 தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களும், ஆக மொத்தம் 6844 சேவை வழங்குநர்கள், 9359 வேளாண் இயந்திரங்களையும் 6780 கருவிகளையும் விவசாயி களுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக பதிவு செய்துள்ளனர்.*

*இ-வாடகை 2.0 என்ற இக் கைபேசிச் செயலி, வேளாண் துறையில் டிஜிட்டல் மாற்றத்தை புகுத்தும் ஒரு முக்கிய முயற்சியாகும். இந்த தளம் மூலம், விவசாயிகளுக்கு எளிதான இயந்திர வாடகை சேவைகள் வழங்கப்பட்டு, வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் உயர்த்தப்படுவதுடன், விவசாயிகளின் வருமானம் அதிகரிக்கவும் உதவுகிறது.*

*எனவே, விவசாயப் பெருமக்கள் தங்களுக்கு தேவைப்படுகின்ற வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளான டிராக்டர், நெல் நாற்று நடும் இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், ட்ரோன்கள் போன்றவற்றினை இச்செயலி மூலம் எளிதாக வாடகைக்கு பெற்று பயன்பெறுமாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் இம்மேம்படுத்தப்பட்ட “இவாடகை 2.0” என்ற கைபேசி செயலினை தர்மபுரி மாவட்டத்திலுள்ள தருமபுரி விற்பனைக்குழு அலுவலகம், மதிகோண்பாளையத்தில் விவசாயிகள் முன்னிலையில் 21.02.2026 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இச்சேவையினை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.*